1. நிதிக்கூற்றுக்கள்

……………………………

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

…………………………………

இலங்கை ரஜரட பல்கலைக் கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரஜரட பல்கலைகழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

……………………………………………………….

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

……………………………………………………………………………………………………………………

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகம் தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு

...................................................................................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்ானிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்
..........................................................................................................................

1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்
.............................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் ............................................... | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் ................................. | சிபாரிசுகள் ................. |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 04 நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 10,893,922 நடைமுறைவேலைக் கணக்கிலிருந்து உரிய சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்காமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் அதற்கு சமமான பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் அச்சொத்துக்களுக்குரிய ரூபா 406,566 தொகையான பெறுமானத் தேய்வினை கணக்கீடு செய்யாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை அதற்கு சமமான பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட எனினும் மூலதனமாக்கப்படாத கட்டிடங்கள் | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இப்பிழைகள் சரிசெய்யப்படும். | நடைமுறைவேலைகளை சொத்துக்களாக இனங்கண்டு மூலதனமாக்குதலும் பெறுமானத்தேய்வு செய்தலும் உரிய வேளைக்குச் செய்யப்பட வேண்டியதுடன் இடம்பெற்றுள்ள பிழைகளை சரிசெய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அற்ற சொத்துக்களுக்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 15,767,310 தொகை மீளாய்வாண்டின் போது நடைமுறை வேலைக் கணக்கிலிருந்து கட்டிடக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததன் காரணமாக அதற்கு சமமான பெறுமதியால் அச்சொத்துக்கள் கணக்குகளின் கிரயம் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | பல்கலைக்கழகத்தினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அனுராதபுரம் போதனா வைத்தியசாலை காணியில் நிர்மாணிக்கப்பட்ட 02 கட்டிடங்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,027,676,497 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அக்காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 23,999,000 கிரமான மருத்துவ உபகரணங்களுக்காக ஆரம்பத்திலிருந்தே பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 16,799,300 தொகை பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அச்சொத்துக்களை காணியின் உரிமையாண்மையுள்ள நிறுவனத்திற்கு முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்கள் அனைத்தும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையினால் பராமரிக்கப்படுகின்ற சொத்துக்கள் எனவும் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்குச் சமர்ப்பித்து அச்சொத்துக்களை அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது பிழைகள் சரிசெய்யப்படும். | காணியின் உரிமையாண்மையுள்ள நிறுவனத்திற்கு இச்சொத்துக்களை முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேறக்கூடிய பெறுமதி இல்லாத ரூபா 4,730,583 கிரயமான கலாவதியான இருப்புக்கள், ஆண்டின் இறுதியிலுள்ள மிகுதி இருப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்கள் அதற்குச் சமமான பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | இது தொடர்பான சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்காக 03 குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. அக்குழுக்களின் அறிக்கை அடுத்துவரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டு அதன் சிபாரிசுகளின் அடிப்படையில் நிருவாக | நிகர தேறக்கூடிய பெறுமதி இல்லாத காலாவதியான இருப்புக்களை இலாபத்திற்கு எதிராக முறையாக பதிவழித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 69,717,263 தொகையான பிணைமுறிகளை மீறிய கடன்பட்டோர் மீதிக்குள் காணப்பட்ட ரூபா 3,784,401 தொகையான பிணைமுறிகள் மீளாய்வாண்டின் போது 2023 ஆம் ஆண்டுவரை அமுலுக்கு வரும் வகையில் புதுப்பிக்கப்பட்டிருந்ததனால் அப் பெறுமதியானது கடன்பட்டோர் கணக்கிலிருந்து நீக்கப்படவேண்டி இருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததனால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிணைகளை மீறிய நிதியக் கணக்கின் மற்றும் பிணைமுறிகளை மீறிய கடன்பட்டோர் கணக்கின் மீதி அதற்குச் சமமான பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இப் பிழைகள் சரிசெய்யப்படும். | 2023 ஆம் ஆண்டு வரை அமுலுக்கு வரும் வகையில் புதுப்பிக்கப்பட்டிருந்த பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 3,784,401 தொகை கடன்பட்டோர் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு முறைப்படியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஆனால் இனங்காணப்படாத ரூபா 2,711,041 தொகை நானாவித வைப்புக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ஆனால் இனங்காணப்படாத வைப்புக்களை இனங்கண்டு கணக்கு வைக்கப்படும் வரை நானாவித வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்படும். எதிர்காலத்தில் இக்கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டுள்ள வருமானங்களை சரியாக இனங்கண்டதன் பின்னர் நிர்ணயிக்கப்பட்டவாறு கணக்கு வைக்கப்படும். | இனங்காணப்படாத பெறுவனவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதன் மூலம் இப்பிழைகளை சரிசெய்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது பல்கலைகழகத்திற்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 1,791,447 தொகையான 2,253 புத்தகங்களும் சஞ்சிகைகளும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இப் பிழைகள் சரிசெய்யப்படும். | அன்பளிப்பாகக் கிடைத்த புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்து இப்பிழைகளை சரிசெய்தல் வேண்டும். |
| (எ) | 2019 நவம்பர் 25 ஆந் திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு தகமைபெற்றுள்ள உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து 10 சதவீதம் அறவிடப்படவேண்டிய போதிலும் ரஜரட பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பதிவாளர் ஆகிய பதவிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 274,210 தொகை அறவிடப்பட்டிருக்காமை மற்றும் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகையும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்களும் அதற்குச் சமமான பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 09/2019 ஆம் இலக்க சுற்றிக்கை தொடர்பாக ஆணைக்குழுவிடம் விசாரிக்கப்பட்டதுடன் பல்கலைக்கழகத்தின் வீடமைப்பு குழு தீர்மானத்தின் அடிப்படையில் வீட்டு வாடகைகளை அறவீடு செய்யலாம் என அக்குழுவினால் தெரியப்படுத்தப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி வீடமைப்பு குழுவின் சிபாரிசின் பேரில் வீட்டு வாடகைகள் திருத்தப்பட்டன. | பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நிலுவையான வாடகைகளை அறவிடவேண்டியதுடன் அதைவிட வித்தியாசமான வகையில் நடவடிக்கை எடுப்பதாயின் அதற்காக மானியங்கள் ஆணைக்குழுவின் எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

..........................................................................................

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | ............. | ............. ரூபா ........... | ............... | .................... | ............... |
| (அ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி | 262,772,409 | விபரமான பட்டோலை | இவ்விடயத்திற்காக வருடாந்தம் பட்டோலை வழங்கப்படும் கணக்காய்வு எதிர்பார்க்கின்ற | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான விபரமான பட்டோலை கணக்காய்விற்குச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா262,772,409 ஆன 03 கணக்கு மீதிகள் தொடர்பான விபரமான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | | | விபரமான பட்டோலை தற்பொழுது பல்கலைக்கழகத்தில் அமுல்ப்படுத்தப்பட்டுவருகின்ற தகவல் முறைமையினூடாக எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 02 பீடங்கள் தொடர்பான இருப்பு மீதிக்கும் அத்திகதியில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட இருப்பு மீதிக்குமிடையில் ரூபா 211,700 தொகையான வித்தியாசம் காணப்பட்ட போதிலும் வித்தியாசத்திற்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை | 211,700 | இருப்பு வித்தியாசத்தை தேடிப்பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த வித்தியாசத்தை தேடிப்பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசத்திற்கு காரணமான விடயங்களை இனங்கண்டு தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளவேண்டும். |

1.6 பெறவேண்டிய கணக்குகள்
..............................................

1.6.1 பெறவேண்டிய பணம்
...................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் ................................ | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் ............................. | சிபாரிசுகள் .................. |
|---|---|---|
| 02 ஆண்டுகளுக்கும் 17 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வீச்சின் போது | இன்றுவரை ஊழியர் சேமலாப நிதிகளை விடுவிக்காத நபர்களிடமிருந்து கடன் | கடன் பணத்தை காலதாமதமின்றி விரைவாக அறவீடு செய்வதற்கு முறையான |

| | | |
|---|---|---|
| ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 698,580 தொகையான ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | மீதியை அறவீடு செய்வதற்கும் தகவல்கள் இல்லாத உத்தியோகத்தர்களின் விபரங்களைத் தேடிப்பார்த்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மானியங்கள் சம்பந்தமான வழிகாட்டிக் கோவையின் 2.10 ஆம் பந்தியின் பிரகாரம் ஆராய்ச்சி மானியங்கள் 90 நாட்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 09 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,008,427 தொகையான முற்பணங்கள் 2022 மே 30 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இன்றுவரை 07 ஆராய்ச்சியாளர்களின் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மிகுதியான ஆராச்சி முற்பணங்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மானியங்கள் சம்பந்தமான வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) மற்றும் 38(2) ஆம் பிரிவுகள் | ஒவ்வொரு நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக விளைதிறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்து பேணப்படுகின்றது என்பது துணைவேந்தரால் சான்றுபடுத்தப்படவேண்டியதுடன் அந்த முறைமையின் | 2021 ஆம் ஆண்டின் போது அனைத்து முறைமைகளுக்காகவும் Integrated University Managment Software Solution முறைமையை | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விளைதிறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதன் எழுத்துமூல பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஸ்தாபிப்பதற்காக ஆரம்ப கட்டிடங்கள் மேற்கொள்ளப்பட்டு பயிற்சி தொடர்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் இம்முறைமை தொடர்பான மீளாய்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571(2) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 1,492,092 மொத்ததொகையான கேள்வி வைப்பு 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 1,729,464 மொத்த தொகையான நானாவித வைப்புக்கள், 2010 ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 137,470,912 மொத்த தொகையான நிறுத்திவைத்தல் பணம் என்பன சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் ............................. | | | |
| (i) | 5.2.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக பதவியணியிலுள்ள 81 உத்தியோகத்தர்களுக்கு வீட்டு வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிரந்தர வீடுகளில் இருக்கும் திருமணமான உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் மாதம் 12.5 சதவீதமும் நிரந்தர வீடுகளில் இருக்கும் திருமணமாகாத உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் மாதம் 7.5 சதவீதமுமாக வீட்டு வாடகை அறவிடப்படாது அதற்குப்பதிலாக மாதாந்தம் ரூபா 750 தொகை மற்றும் ரூபா 1,500 தொகையாக வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. | 09/2019 ஆம் இலக்க பலகலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை தொடர்பாக மானியங்கள் ஆணைக்குழுவிடம் விசாரிக்கப்பட்டதுடன் பல்கலைக்கழகத்தின் வீடமைப்பு குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் வீட்டு வாடகை அறவிடப்படலாம் என அக்குழுவினால் தெரியப்படுத்தப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி வீடமைப்பு குழுவின் சிபார்சின் அடிப்படையில் வீட்டு வாடகை திருத்தப்பட்டது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 5.2.3 ஆம் பந்தி | பொழுது போக்கு இல்லங்களாகப் பெயரிடப்பட்ட 31 வீடுகளுக்காக போதியளவு பொருளாதார வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுகப்கப்படாது ஒரு | இது சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் விசாரித்த போது பல்கலைக்ழகம் அமைந்துள்ள இடம் மற்றும் ஊழியர்கள் | தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து போதியளவு பொருளாதார வாடகையை மதிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீட்டிற்கு ஆகக் குறைந்தது ரூபா 400 இலிருந்து உச்ச அளவாக ரூபா 750 வரையான பணத்தைஅறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தொடர்பாக கவனித்துப் பார்த்ததன் பின்னர் பல்கலைக்கழக வீடமைப்புக் குழுவின் மூலம் பொருளாதார வாடகையை தீர்மானிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள் ளதுடன் அதற்கிணங்க குழுவினால் உரிய வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன . | வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி | உயர்கல்வி நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும் வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை பதிவுசெய்ய வேண்டிய போதிலும் கல்வி பதவியணியினர் கடமைக்கு வருகை தரும் மற்றும் வெளிச்செல்லும் நேரங்களை பதிவு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பல்கலைக்கழக தாபன விதிக்கோவையில் காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மானியம் சம்பந்தமான வழிகாட்டிக் கோவையின் 3.3 ஆம் பந்தி | ஆராய்ச்சியின் இறுதி அறிக்கையை ஆராய்ச்சிக் குழுவிற்குச் சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முற்பணங்கள் 04 தவணைகளில் சம்பளங்களிலிருந்து அறவிடப்படவேண்டிய போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சிகளுக்குரிய இறுதி அறிக்கையானது ஆராய்ச்சிக் குழுவிற்கு சமர்ப்பிக்காத | தற்பொழுது ஆராய்ச்சிக் குழுவின் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மானியம் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கு 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 2,671,318 தொகையான முற்பணங்களை அந்த உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 2019 நவம்பர் 25 ஆந் திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ இல்லங்களின் நீர்ப்பட்டியல் மற்றும் மின்சாரப் பட்டியல்களை உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்துபவர்கள் செலுத்தவேண்டிய போதிலும் துணை வேந்தரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் ரூபா 197,917 தொகையான நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்கள் பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4(ii) ஆம் பந்தி | ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் அப்பிரேரணைகளுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயல்முன்னேற்றத்தை உள்ளடக்கிய இடைக்கால ஆராய்ச்சி அறிக்கையானது ஆராய்ச்சி முகாமைத்துவத்திற்கான குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பபட்டு ஆரம்பிக்கப்பட்ட 08 ஆராய்ச்சிகள் சம்பந்தமான | தற்பொழுது ஆராய்ச்சி செயல்முன்னேற்றங்களை 06 மாதங்களில் பெற்றுக்கொள்வசதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் ஆராய்ச்சிக் குழுவினால் வழங்கப்பட்டுள்ளதுடன் சரியாக ஆராச்சி முன்னேற்றத்தை வழங்கவில்லையாயின் அவர்களுக்காக நடவடிக்கை எடுப்பதற்கு ஆராய்ச்சிகுழு | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து ஆராய்ச்சிகளினதும் ஆராய்ச்சி செயல் முன்னேற்றங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயல்முன்னேற்ற அறிக்கையும் 2021 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட அனைத்து ஆராய்ச்சிகளினதும் செயல்முன்னேற்ற அறிக்கைகளும் அக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | தீர்மானித்துள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,552,762 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 140,295,545ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 143,848,306 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டதுடன் இந்த முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தின் மீண்டுவரும் மானியம் ரூபா 158,500,000 ஆல் அதிகரித்தல் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவுகள் ரூபா 22,993,149 ஆல் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டு அரம்பிக்கப்பட்ட 03 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 2,700,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தில் 20 சதவீதத்திற்குச் சமமான ரூபா 550,000 தொகை மாத்திரம் செலவு செய்யப்பட்டதுடன் இந்த ஆராய்ச்சியை திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்துவதற்கும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கும் முடியாதிந்தது. | இதற்கு பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் தாக்கமளித்திருந்த போதிலும் இதன் பின்னர் ஆராய்ச்சிகளின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கும் அந்த உத்தியோகத்தர்களின் ஆராய்ச்சிகளை திட்டமிடுவதிலுள்ள பலவீனங்களுக்கு காரணங்களை விசாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டமிட்டவாறு ஆராச்சிகளை அமுல்ப்படுத்துவதற்கு முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப் வேண்டும். |

3.2 செயற்திட்டங்களில் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

........................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................ | ............................. | .................. |
| சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பிணைகள் முறையான படிவத்திற்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை, இறுதி 05 ஆண்டுகளில் பூர்த்திசெய்த 05 பிரதான ஒப்பந்தங்கள் தொடர்பாக ஒப்பந்தங்களை வழங்குதல், கடிதம் மற்றும் வேலை பூர்த்திசெய்யப்பட்டது என்பதற்கான கடிதங்கள் சமர்ப்பிக்காமை மற்றும் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த வருமானம் ரூபா 52.5 மில்லியனை உழைக்காதிருந்தமை ஆகிய விடயங்களை கருத்தில் கொள்ளாது ரூபா 17,500,000 ஒப்பந்த பெறுமதியான உள்ளக தொடர்பு முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 அளவில் மென்பொருளை பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டிய போதிலும் 2022 மே 02 ஆந் திகதி வரை அது பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | பகிரங்கப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணங்களின் அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பிணையானது பாரிய மீறல்கள் அற்றதனால் அதனை செலலுபடியாகும் கேள்விப் பிணையாக ஏற்றுக்கொள்வதாகவும் கேள்விதாரர்களால் கடைசி 05 ஆண்டுகளின் போது பூர்த்தி செய்த 05 பிரதான ஒப்பந்தங்களின் விபரங்களானது உறுதியாக கேள்விதாரர்களின் தொடர்ச்சியான உள்ளமை மற்றும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றமை தொடர்பாக தேடிப்பார்ப்பதற்காக மாத்திரம் எனவும் ரூபா 52.5 மில்லியன் சராசரி வருடாந்த வருமானம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமாயின் எவரும் முன்வருவதில்லை என்பதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கருத்தாக இருப்பதனாலும் அங்கீகரித்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 17.5 மில்லியனாக இருப்பதனாலும் திணைக்கள பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த வருமானம் ரூபா 20 மில்லியனாக கேள்வி பத்திரத்தின் மூலம் வேண்டப்பட்டுள்ளது எனவும் கேள்விதாரரினால் சமர்ப்பித்த முன் அனுபவம் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு திருப்தியடைந்துள்ளதனால் ரூபா 17.5 மில்லியனுக்கு தெரிவுசெய்யப்பட்ட | பெறுகை நடவடிக்கையின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் வழங்குனர்கள் தெரிவு செய்யப்படவேண்டியதுடன் செயற்பாடுகளை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோயின் காரணமாக முறைமையின் நடவடிக்கைகள் முறைப்படியாக நிறைவேற்றப்படாமையால் ஒப்பந்த காலமானது 2021 திசெம்பர் 31 ஆந் திகதிவரையும் பின்னர் 2022 யூன் 30 ஆந் திகதி வரையும் நீடிக்கப்பட்டிருந்தது.

3.3 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்
.........................................................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் ..................................... | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் ............................. | சிபாரிசுகள் .................. |
|---|---|---|---|
| (அ) | மிஹிந்தலை வளவில் 04 இரட்டை ஊழியர் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பான உடன்படிக்கையானது பல்கலைக்கழகத்தினால் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்நிர்மான செயற்திட்டம் தொடர்பாக ரூபா 3,952,742 தொகையான செயலாற்றல் பிணை 2018 பெப்ரவரி 12 ஆந் திகதியும் ரூபா 10,540,647 தொகையான முற்பணங்கள் பிணையானது 2018 மார்ச் 05 ஆந் திகதியும் காலாவதியாகியிருந்ததுடன் அவற்றின் காலத்தை நீடிப்பதற்கு அல்லது பணமாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக உடன்படிக்கையை முடிவுறுத்திய திகதியளவில் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடவேண்டியிருந்த | பெறுகைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிணையை நீடிப்புச் சய்வதற்குரிய அறிவிததல்கள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டது. செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் மூலம் ஒப்பந்தக்காரருக்குத் தேவையான ஆலோசனைகளும் பணிப்புரைகளும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொண்டு அந்த ஒப்பந்தக் கம்பனியினூடாகவே இச்செயற்திட்டத்தினை முடியுறுத்தியமை பல்கலைக்கழகத்தின் முயற்சியாகும். எவ்வாறாயினும் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி ஒப்பந்தத்தை முடிவுறுத்தியதன் மூலம் இழக்கப்பட்ட நட்டத்தை ஒப்பந்த கம்பனிகளிடமிருந்து அறவீடு செய்வதற்காக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அப்போது காணப்பட்ட நடைமுறை நிலைமை தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்கையில் | முற்பணப் பிணைகள் மற்றும் செயலாற்றல் பிணைகளை பணமாக்கி கொள்வதற்கு முடியாமையினால் ஏற்பட்ட நட்டமானது பல்கலைக்கழகத்திற்கான ஒரு நட்டமாகாத வகையில் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு மிகைக்க கட்டணம் விதிப்பதற்குநடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 15,760,011 மொத்த பணத்தினை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தது. | பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் சரியாக செயற்பட்டுள்ளதாகும். | |
| (ஆ) | முகாமைத்துவ கல்விப் பீடத்திற்கு வாயு சீராக்கி முறைமையை ஸ்தாபிப்பதற்காக ரூபா 6,211,226 ஒப்பந்த பெறுமதியுடன் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காருக்கு ஒப்பந்த வழங்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் வழங்கும் கடிதம் 02 மாதங்களுக்கு அண்மித்த காலம் தாமதத்துடன் அனுப்பிவைத்திருந்தமையின் காரணமாக வழங்குனரினால் அதனை பொறுப்புற்றல் நிராகரிக்கப்பட்டிருந்தது. அப்போது கேள்விப் பிணை காலாவதியாகியிருந்தனால் அதனை பணமாக்கி கொள்வதற்கு இருந்த போதிலும் வாய்ப்பு இல்லாமல் போயிருந்தது. | இப்பெறுகை செயற்பட்டு நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் கொவிட் தொற்று நோயினால் நாடு மூடப்பட்டிருந்ததனால் ஒப்பந்தத்தை வழங்கும் கடிதம் 2021 ஒக்தோபர் 05 ஆந் திகதி அனுப்பப்பட்டதுடன் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் காரணமாக உரிய விலைக்கு ஒப்பந்தத்தை மேற்கொள்ள முடியாது என ஒப்பந்க்காரர் தெரிவித்துள்ளார். | கேள்விப் பிணைகள் காலாவதியாவதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு கேள்வியை வழங்கி தேவையான முயற்சிகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

.............................................................

4.1 உள்ளகக் கணக்காய்வு

......................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ..................................................... | ............................. | .................. |
| உள்ளகக் கணக்காய்வாளரின் விடயப் பரப்பிற்கு உட்படாததான செயற்பாடுகளை உள்ளகக் கணக்காய்வாளரின் கடமை ஒப்படைப்பு பதிவேட்டிலும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திலும் உள்ளடக்கியமையின் காரணமாக உள்ளகக் கணக்காய்வாளரின் பிரதான செயற்பாடான பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் நடவடிக்கைகள் | எதிர்காலத்தில் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் நடவடிக்கைகள் தொடர்பாக நாளாந்தம் உயர் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடும் செயற்பாட்டினை உறுதிப்படுத்தும் வகையிலும் உள்ளகக் |

| | |
|---|---|
| தொடர்பாக நாளாந்தம் உயர் முகாமைக்கு அறக்கையிடுகின்ற செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வாளரின் சுதந்திரமும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வாளரின் சுதந்திரத்தினை மட்டுப்படுத்தாத வகையிலும் உள்ளகக் கணக்காய்வாளரின் கடமைகளை ஒப்படைக்கும் பதிவேடும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டமும் தயாரிக்கப்படுதல் வேண்டும். |